# விளையாட்டு ஆத்திசூடி

பல்கலைப் பேரறிஞர்
டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா
M.A.,M.P.Ed.,Ph.D.,D.Litt.,D.Ed., FUWAI

# விளையாட்டு ஆத்திசூடி

தேசிய விருது பெற்ற நூலாசிரியர்

பல்கலைப் பேரறிஞர்

**டாக்டர். எஸ். நவராஜ் செல்லையா**

M.A., M.P.Ed., Ph.D., D.Litt., D.Ed., FUWAI

முன்னாள் பேராசிரியர், ஆய்வுத்துறைத் தலைவர்,

ஒய்.எம்.சி.எ. உடற்கல்விக் கல்லூரி,

சென்னை - 600 035.

**ராஜ்மோகன் பதிப்பகம்**

'லில்லி பவனம்'

8, போலீஸ் குவார்ட்டர்ஸ் ரோடு,

தி.நகர், சென்னை - 600 017.

தொலைபேசி : 044 - 2433 2696

தபால் பெட்டி எண்:4955

## நூல் விபர அட்டவணை

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **விளையாட்டு ஆத்திசூடி** |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | கவிதை |
| ஆசிரியர் | : | டாக்டர்.எஸ்.நவராஜ் செல்லையா (1937-2001) |
| முதல் பதிப்பு | : | 1988 |
| இரண்டாம் பதிப்பு | : | 1996 |
| மூன்றாம் பதிப்பு | : | ஜுலை 2009 |
| நூலின் அளவு | : | கிரவுன் |
| படிகள் | : | 1200 |
| அச்சு | : | 12 புள்ளி |
| தாள் | : | வெள்ளை |
| பக்கங்கள் | : | 96 |
| நூல்கட்டுமானம் | : | பேப்பர் அட்டைக்கட்டு |
| **விலை** | : | **ரூ. 35.00** |
| உரிமை | : | பதிப்பகத்தாருக்கு |
| தயாரிப்பு | : | ஆர். ஆடம் சாக்ரட்டீஸ் |
| வெளியிட்டோர் | : | **ராஜ்மோகன் பதிப்பகம் 'லில்லி பவனம்'** 8, போலீஸ் குவார்ட்டர்ஸ் ரோடு தி.நகர், சென்னை-600 017. |
| அச்சிட்டோர் | : | கலர்விங்ஸ் சென்னை-600 005. |

# முன்னுரை

விளையாட்டுத் துறை இலக்கியத்தில் எழுந்த தமிழ் நூல்களில் இந்த நூல் ஒரு புதிய முயற்சியாகும்.

விளையாட்டு விழாக்கள் நடைபெறுகின்ற பொழுது சொற்பொழிவாற்ற வருகின்றவர்கள், பேச்சுக்கிடையில் 'சுவரை வைத்துத்தான் சித்திரம், நல்ல உடல் நல்லமனம், நோயற்ற வாழ்வு குறைவற்ற செல்வம்' என்பன போன்ற கருத்துக்களையே திரும்பத் திரும்ப பேசுவதை பல முறை கேட்டிருக்கிறோம்.

இத்தகைய பேச்சுக்களை கேட்கின்ற பொதுமக்களும், விளையாட்டு விழா என்றால் இப்படித்தான் சொற்பொழிவு அமைந்திருக்கும் என்று முன் கூட்டியே முடிவு செய்து விட்டு, பேசுவோர்க்கிடையே தாங்களும் பேசிக்கொண்டு பொழுது போக்குவதும் உண்டு.

அத்தகைய ஒரு சூழ்நிலையை ஆத்திசூடி மாற்றியமைத்து, மேடைப் பேச்சில் விளையாட்டுத் துறைபற்றிய விளக்கம் தர உதவும் என்ற உண்மையான நம்பிக்கையுடன் ஆத்திசூடி நூலை உருவாக்கி இருக்கிறேன்.

ஔவை பாடிய ஆத்திசூடியை யார்தான் மறக்க முடியும்? ஓரிரு சொற்களில் உலகையே விளக்கிக் காட்டுகின்ற ஒப்பற்ற அமைப்பிலே உருவாகிய ஆத்திசூடி முறையை என் மனதிலே பதித்து வைத்துக் கொண்டேன். ஒரு வரியிலே சொல்லத் தெரியாத எனக்கு, ஆங்கிலப் பாடல் ஒன்றின் வடிவம் எனக்கு ஞாபகம் வந்தது, அதாவது 14 அடிகள் உடைய 'சானட்' என்ற பாட்டு முறை அது. ஆகவே, ஒவ்வொரு சொல்லுக்கும் 14 வரிகள் கொண்ட முறையில் உருவாக்கிச் சொல்லியிருக்கிறேன். எனது விளையாட்டுத்துறைப் பற்று இப்படி ஒரு முயற்சியில் ஈடுபட வைத்திருக்கிறது.

விளையாட்டுக்களின் பெருமையைச் சொல்வதற்கு இதைவிட சிறந்த வழி எனக்குப் புலப்படவில்லை. ஆசையின் காரணத்தால் ஆரம்பித்துவிட்ட நான், புதிய புதிய சொற்களுக்காகவும், கருத்துக்களுக்காகவும் பெரிதும் அலையத்தான் நேரிட்டது, என்றாலும் சமாளித்துக் கொண்டு, ஓரளவு முடித்து விட்டேன்.

நூல் எப்படி இருக்கிறது என்று வாசகர்கள் தான் முடிவெடுக்க வேண்டும். இன்னும் நன்றாக எழுதியிருக்கலாம் என்று நீங்கள் நினைப்பது கூட, என் முயற்சியை ஆதரித்ததாகவே இருக்கும் என்று நம்புகிறேன்!

ஏன் எழுதவேண்டும் என்று கேட்பவர்களும் இருக்கின்றார்கள். என் மனதிலே உதித்த கருத்துக்களை வெளிப்படுத்த எனக்கு ஆன்ம பலத்தையும், பொருள் வளத்தையும் தந்த இறைவனுக்கு நன்றி சொல்வதற்காக இந்நூலை உருவாக்கியிருக்கிறேன் என்றால் அது தான் உண்மை.

எப்படியெல்லாம் விளையாட்டுக்களின் பெருமையை விளக்கிச் சொல்ல வேண்டும் என்று நான் விரும்பினேனோ, அப்படியெல்லாம் சொல்லியிருக்கிறேன். வார்த்தைகளும், என்னுடன் வந்து ஒத்துழைத்து இடம் பெற்றுக் கொண்ட விந்தையை நானும் உணர்ந்து வியந்து போனதுண்டு.

விளையாட்டுத் துறையில் நூறு நூல்கள் எழுதுவதற்கு என்னை உற்சாகப் படுத்திய வாசகர்கள் அனைவருக்கும் என் இதய பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

என் முயற்சிகளை இகழ்ச்சியாகப்பேசி, என்னை துயரப்படுத்த முயன்றவர்களுக்கு என் மனம் கனிந்த நன்றி. ஏனென்றால், அவர்கள் தான் என் லட்சியம் சிதைந்து போகாமல் உணர்ச்சி பூர்வமாகக் காத்து உழைத்திட உதவிய உத்தமர்கள். அவர்களை இந்த நேரத்தில் நன்றியுடன் நினைக்கிறேன்.

விளையாட்டுத்துறையில் பணியாற்ற வந்த நாளிலிருந்து இன்று வரை எனக்கு ஆக்கப்பூர்வமான உதவிகள் அனைத்தும் செய்து, ஆதரித்து அன்பு காட்டி வரும் எனது குருநாதர் டாக்டர் M. ராப்சன் அவர்களை நன்றியுடன் நினைத்து மகிழ்கின்றேன்.

இந்நூல் அழகுற அச்சிட உதவிய செல்வன் R. ஆதாம் சாக்ரட்டிசுக்கும், செல்வி C. கௌரிக்கும், நல்ல முறையில் அச்சிட்ட கிரேஸ் பிரிண்டர்சுக்கும் என் இதயங் கனிந்த நன்றி.

தமிழ்த் தாயின் தளிர்ப் பாதங்களில் மீண்டும் ஒரு விளையாட்டுத்துறை தமிழிலக்கிய நூல் ஒன்றை சமர்ப்பித்திருக்கின்றேன். மேலும் என் கரங்களுக்கு வலுவூட்டும் அன்பர்கள் அனைவர்க்கும் நன்றி கூறுகிறேன்.

வணக்கம்,

அன்பன்

**எஸ். நவராஜ் செல்லையா**

---

1988 ஆம் ஆண்டில் முதல் பதிப்பாக வெளிவந்தபோது எழுதப்பட்ட ஆசிரியரின் முன்னுரை அப்படியே இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டுத்துறை தமிழ் இலக்கிய வளர்ச்சியில் இந்நூல் முக்கிய இடம் பெறும் என நம்புகிறோம். - பதிப்பாளர்

# அ

அவனியில் சிறந்தது விளையாட்டு
அனுதினம் தொடர்வது விளையாட்டு
அகிலத்தை இணைப்பது விளையாட்டு
அனுபவம் அளிப்பது விளையாட்டு
அன்பை வளர்ப்பது விளையாட்டு
அறிவைக் கொடுப்பது விளையாட்டு
அழகினை பொழிவது விளையாட்டு
அகிம்சையை நினைப்பது விளையாட்டு
அற்புதம் விளைப்பது விளையாட்டு
அமைதியை தருவது விளையாட்டு
அணிகலன் வாழ்வுக்கு விளையாட்டு
அருமையில் அருமை விளையாட்டு
அனைவரும் விரும்பிடும் விளையாட்டு
அறிந்தவர்க்கு அதுவே இசைப்பாட்டு

# ஆ

ஆற்றலைத் தருவது விளையாட்டு
ஆளுமை வளர்ப்பது விளையாட்டு
ஆவலை விளைப்பது விளையாட்டு
ஆணவம் தவிர்ப்பது விளையாட்டு
ஆண்டவன் ஆவதும் விளையாட்டு
ஆரோக்கியம் அளிப்பது விளையாட்டு
ஆவேசம் தணிப்பது விளையாட்டு
ஆரையும் உயர்த்திடும் விளையாட்டு
ஆதரவு அளிப்பது விளையாட்டு
ஆசைக்கு வடிவம் விளையாட்டு
ஆன்றோர் ஆக்கிடும் விளையாட்டு
ஆனந்தம் கொடுப்பது விளையாட்டு
ஆதாரம் உடலுக்கு விளையாட்டு

# இ

இகத்தினில் சுகந்தரும் விளையாட்டு
இனிய நல் வழிதரும் விளையாட்டு
இதயத்தின் செழுமைக்கு விளையாட்டு
இரத்தத்தின் தூய்மைக்கு விளையாட்டு
இல்லாமை தீர்த்திடும் விளையாட்டு
இயலாமை போக்கிடும் விளையாட்டு
இன்னாரை திருத்திடும் விளையாட்டு
இசைவாரை உயர்த்திடும் விளையாட்டு
இசையாக மயக்கிடும் விளையாட்டு
இன்பத்தை முழக்கிடும் விளையாட்டு
இரும்பென உடல்தரும் விளையாட்டு
இல்லாத இடமில்லை விளையாட்டு
இதமான வாழ்வுக்கு விளையாட்டு
இணையிலா செயலே விளையாட்டு

# ஈ

ஈசுதன் ஆக்கும் விளையாட்டு
ஈசுவை போக்கும் விளையாட்டு
ஈடகம் ஆவது விளையாட்டு
ஈடணம் தருவது விளையாட்டு
ஈமான் வளர்க்கும் விளையாட்டு
ஈடேற்றம் கொடுக்கும் விளையாட்டு
ஈரல் எ.்.காக்கும் விளையாட்டு
ஈரறம் காக்கும் விளையாட்டு
ஈரெட்டுப் பேற்றுக்கு விளையாட்டு
ஈளையை மாற்றும் விளையாட்டு
ஈர்மை மதிதரும் விளையாட்டு
ஈனத்தை அழிக்கும் விளையாட்டு
ஈடில்லை என வரும் விளையாட்டு
ஈசனாய் ஆட்டும் விளையாட்டு

அரும்பொருள்

ஈசுதன்-ஆள்பவன்
ஈசுவை-பொறாமை
ஈடகம்-கவர்வது
ஈடணம்-புகழ்
ஈமான்-கொள்கை
ஈரறம்-இல்லறம் துறவறம்
ஈர்மை-நுண்மை
ஈளை-கோழை

# உ

உலகம் தனில் முதல் விளையாட்டு
உயிருக்கு உறுதுணை விளையாட்டு
உடலுக்கு எழில்திடல் விளையாட்டு
உணர்வுக்கு அலைகடல் விளையாட்டு
உறுதியை வளர்க்கும் விளையாட்டு
உறுநோய் தீர்க்கும் விளையாட்டு
உடுகையாய் விளங்கும் விளையாட்டு
உற்சாகம் அளிப்பது விளையாட்டு
உழைப்பின் சிகரம் விளையாட்டு
உழைப்பாரை உயர்த்தும் விளையாட்டு
உண்மையை உணர்த்தும் விளையாட்டு
உவப்பினில் ஆழ்த்தும் விளையாட்டு
உடமை மனிதர்க்கு விளையாட்டு
உணவாய் காப்பதும் விளையாட்டு

# ஊ

ஊதியம் உயிர்க்கு விளையாட்டு
ஊருக்கோர் ஊரணி விளையாட்டு
ஊனை வளர்க்கும் விளையாட்டு
ஊனம் மாற்றிடும் விளையாட்டு
ஊளைச்சதை அகற்றும் விளையாட்டு
ஊளியைக் கொடுக்கும் விளையாட்டு
ஊட்டம் அளிப்பது விளையாட்டு
ஊரை ஒன்றாக்கும் விளையாட்டு
ஊடாடிப் பார்த்திட விளையாட்டு
ஊடாட்டம் கொள்ள விளையாட்டு
ஊக்கம் தருவது விளையாட்டு
ஊழியன் மனிதர்க்கு விளையாட்டு
ஊன்றுகோல் வாழ்வுக்கு விளையாட்டு
ஊட்டுந் தாய் ஆவதும் விளையாட்டு

அரும்பொருள்

ஊளி-பசி
ஊடாடி-ஆராய்ந்து
ஊடாட்டம்-பழக்கம்

# எ

எண்ணத்தில் சுவைப்பது விளையாட்டு
எழிலை வளர்ப்பது விளையாட்டு
எ.்.கென நரம்புக்கு விளையாட்டு
எதிரியே நோய்க்கு விளையாட்டு
எழுச்சியை கொடுப்பது விளையாட்டு
எஞ்சாமை தரும் விளையாட்டு
எய்யாமை போக்கும் விளையாட்டு
எதிர் நீச்சுப் பயிற்சிக்கு விளையாட்டு
எதிர்கால உயர்வுக்கு விளையாட்டு
எஞ்ஞான் றும் துணை விளையாட்டு
எண்ணெழுத் தாவதும் விளையாட்டு
என்றும் நல் அனுபவம் விளையாட்டு
எண்குணம் வளர்த்திடும் விளையாட்டு
எல்லோருக்கும் பொது விளையாட்டு

அரும்பொருள்

எஞ்சாமை-முழுமை
எய்யாமை-அறியாமை

# ஏ

ஏகமாய் விளங்கிடும் விளையாட்டு
ஏகாந்தம் மாற்றிடும் விளையாட்டு
ஏடாய் உதவிடும் விளையாட்டு
ஏடைக்கு இடந்தரும் விளையாட்டு
ஏணியாய் உயர்த்திடும் விளையாட்டு
ஏதத்தை மாற்றிடும் விளையாட்டு
ஏழ்மையை அகற்றும் விளையாட்டு
ஏய்ப்பாரை சாடிடும் விளையாட்டு
ஏற்றோரை உயர்த்தும் விளையாட்டு
ஏறுபோல் நடைதரும் விளையாட்டு
ஏந்தலாய் வளர்த்திடும் விளையாட்டு
ஏராள நன்மைக்கு விளையாட்டு
ஏற்றதே மனிதர்க்கு விளையாட்டு
ஏத்துவோம் காத்திடும் விளையாட்டு

அரும்பொருள்

ஏடை-ஆசை
ஏதம்-துன்பம்

# ஐ

ஐயறி வுயிர்க்கும் விளையாட்டு
ஐசுவரியம் ஆனது விளையாட்டு
ஐயம் போக்கிடும் விளையாட்டு
ஐக்கியம் ஆக்கிடும் விளையாட்டு
ஐம்படை போன்றது விளையாட்டு
ஐம்புலன் வளர்க்கும் விளையாட்டு
ஐம்பொறி அடக்கவும் விளையாட்டு
ஐயோனாய் மாற்றும் விளையாட்டு
ஐம்மலம் போக்கும் விளையாட்டு
ஐங்கலை யாவதும் விளையாட்டு
ஐவகை தந்தைபோல் விளையாட்டு
ஐயனாய் உயர்த்தும் விளையாட்டு
ஐந்தாம் வேதமும் விளையாட்டு
ஐந்தரம் ஆனதும் விளையாட்டு

அரும்பொருள்:

ஐயனோய்-நுண்ணியனாய்
ஐவகைத் தந்தை-அரசன், தலைவன், தந்தை,முன்னோர், குரு
ஐயான்-தலைவன்
ஐந்தரம்-அழகு

# ஒ

ஒப்பற்று விளங்குவது விளையாட்டு
ஒத்தநல் மனதுக்கும் விளையாட்டு
ஒற்றுமை சேர்ப்பதும் விளையாட்டு
ஒத்துழை உணர்வுக்கும் விளையாட்டு
ஒப்புரவு ஊட்டும் விளையாட்டு
ஒய்யார வாழ்வுக்கு விளையாட்டு
ஒழுக்கத்தை வளர்க்கும் விளையாட்டு
ஒளி எழில் தீபம் விளையாட்டு
ஒழுங்கறம் காப்பதும் விளையாட்டு
ஒளிமய வாழ்வுக்கும் விளையாட்டு
ஒல்காமை வளர்க்கும் விளையாட்டு
ஒருமுகப் படுத்தும் விளையாட்டு
ஒருவழி சுகவழி விளையாட்டு
ஒருக்காலும் கைவிடாது விளையாட்டு

அரும்பொருள் :

ஒப்புரவு-ஒழுங்கு
ஒல்காமை-தளராமை

# ஓ

ஓங்கிடும் வலிமைக்கு விளையாட்டு
ஓவ்வாப் பிணியகற்றும் விளையாட்டு
ஓவியம் மனதுக்கு விளையாட்டு
ஓதாமல் உணர்த்தும் விளையாட்டு
ஓச்சம் வளர்த்திடும் விளையாட்டு
ஓம்பிடும் உடல் நலம் விளையாட்டு
ஓட்டிடும் மனத்துயர் விளையாட்டு
ஓசையாய் மயக்கிடும் விளையாட்டு
ஓகம் கொடுப்பது விளையாட்டு
ஓகோ என்றிலங்கிடும் விளையாட்டு
ஓடுவித்து உதவும் விளையாட்டு
ஓயா மாரிதான் விளையாட்டு
ஓய்விலா சுகந்தரும் விளையாட்டு
ஓடமே வாழ்வுக்கு விளையாட்டு

அரும்பொருள்

ஓச்சம்-கீர்த்தி
ஓசை-இசை
ஓகம்-அடைக்கலம்
ஓயாமாரி-பெருங்கொடை

# ஔ

'ஔ'விலே அருமைதான் விளையாட்டு
ஔவைபோல் பெரும் புகழ் விளையாட்டு
ஔரிதம் ஆவது விளையாட்டு
ஔதகம் போன்றது விளையாட்டு
ஔசீரம் ஆவது விளையாட்டு
ஔதாரியம் வளர்ப்பது விளையாட்டு
ஔலாத்து பெருக்கிடும் விளையாட்டு
ஔவியம் அழித்திடும் விளையாட்டு
ஔடதம் போன்றது விளையாட்டு
ஔவையாய் அமைவதும் விளையாட்டு

அரும்பொருள்

ஔ-பூமி
ஔரிதம்-தருமநூல்
ஔதகம்-நீலரத்தினம்
ஔசீரம்-ஆசனம்
ஔலாத்து-சந்ததி
ஔவியம்-பொறாமை
ஔடதம்-மருந்து
ஔவையாய்-அம்மையாய்
ஔதாரியம்-பெருந்தன்மை

# க

கவலைகள் போக்கும் விளையாட்டு
கசடுகள் தீர்க்கும் விளையாட்டு
கரும்பென இனிக்கும் விளையாட்டு
கனிகளாய் சுவைக்கும் விளையாட்டு
கட்டுடல் வளர்க்கும் விளையாட்டு
கலைமனம் கொடுக்கும் விளையாட்டு
கரையிலா கடல்போல் விளையாட்டு
ககனமாய் விரிந்தது விளையாட்டு
கற்பகத் தருபோல விளையாட்டு
கடமையை கற்பிக்கும் விளையாட்டு
கல்வியாய் பயன்தரும் விளையாட்டு
கலைகளின் தொகுப்பு விளையாட்டு
கடவுளின் படைப்பே விளையாட்டு

# கா

காட்சிக்கு இனியது விளையாட்டு
காட்சியர் ஆக்கிடும் விளையாட்டு
காவியச் சுவைதரும் விளையாட்டு
காதலின் இதந்தரும் விளையாட்டு
காற்றெனப் பயன்தரும் விளையாட்டு
காற்றாடிக் கவர்ச்சிக்கும் விளையாட்டு
காந்தியை வளர்க்கும் விளையாட்டு
காந்தமாய் கவரும் விளையாட்டு
காலியை மாற்றும் விளையாட்டு
காசையும் கொடுக்கும் விளையாட்டு
காதவம் போன்றது விளையாட்டு
காடகம் வாழ்க்கைக்கு விளையாட்டு
கானமாய் மயக்கும் விளையாட்டு
காலத்தின் அனுபவம் விளையாட்டு

அரும்பொருள்:

காட்சியர்-அறிஞர்
காந்தி-அழகு, ஒளி
காலி-உபயோகமற்றவன்
காதவம்-ஆலமரம்
காடகம்-ஆடை
கானம்-பாட்டு

# கி

கிழமை வளர்க்கும் விளையாட்டு
கிளைஞரைப் பெருக்கும் விளையாட்டு
கியாதி கொடுக்கும் விளையாட்டு
கிரீடம் அணிவிக்கும் விளையாட்டு
கிலியினைப் போக்கும் விளையாட்டு
கிழத்தனம் தீர்க்கும் விளையாட்டு
கிளர்ஈரல் வளர்க்கும் விளையாட்டு
கிளர்ச்சி யுண்டாக்கும் விளையாட்டு
கிரணன் கடமைபோல் விளையாட்டு
கின்னம் மாற்றும் விளையாட்டு
கிஞ்சிதம் போக்கும் விளையாட்டு
கிரிசகம் நீக்கும் விளையாட்டு
கிருபையைக் கொணரும் விளையாட்டு
கிடைத்த நல் புதையலே விளையாட்டு

அரும்பொருள்:

கிழமை-குணம்
கிளைஞர்-உறவினர்
கியாதி-புகழ்
கிரணன்-சூரியன்
கின்னம்-துக்கம்
கிஞ்சிதம்-சிறுமை
கிரிசகம்-வருத்தம்.

# கீ

கீதமாய் விளங்கிடும் விளையாட்டு
கீதைசொல் செயலுக்கு விளையாட்டு
கீழ்மை அகற்றும் விளையாட்டு
கீர்த்தியைக் கொடுக்கும் விளையாட்டு
கீழோரை அகற்றும் விளையாட்டு
கீர்த்தனை உழைப்புக்கு விளையாட்டு
கீனரை மாற்றும் விளையாட்டு
கீழ்மதி போக்கும் விளையாட்டு
கீனம் அழிக்கும் விளையாட்டு
கீலகம் தவிர்க்கும் விளையாட்டு
கீலியாய் ஆக்கும் விளையாட்டு
கீழைநாள் நலத்திற்கு விளையாட்டு
கீழ்மேல் ஆக்கும் விளையாட்டு
'கீரன்' மனம் தரும் விளையாட்டு

அரும்பொருள்

கீர்த்தனை-பாட்டு
கீனரை-அற்பரை
கீனம்-குறைபாடு
கீலகம்-கலகம்
கீலிய-தந்திரமுள்ளவன்
கீழைநாள்-விடியற்காலை
கீரன் மனம்-நக்கீரன் மனம்

# கு

குருவாய் திகழ்வது விளையாட்டு
குணங்களை வளர்ப்பது விளையாட்டு
குலத்தைக் காப்பது விளையாட்டு
குடியை உயர்த்தும் விளையாட்டு
குடையாம் வாழ்வுக்கு விளையாட்டு
குதர்க்கத்தை தவிர்ப்பது விளையாட்டு
குதிரியை அடக்கும் விளையாட்டு
குதூகலம் தரும் விளையாட்டு
குளுமை கொடுக்கும் விளையாட்டு
குலவச் செய்திடும் விளையாட்டு
குற்றமில் நடத்தைக்கு விளையாட்டு
குறிக்கோள் காட்டும் விளையாட்டு
குறைவிலா வாழ்வுக்கு விளையாட்டு
குரிசிலாய் உயர்த்துமே விளையாட்டு

அரும்பொருள்:
குதிரி-அடங்காதவன்
குலவு-மகிழ்வித்தல்
குரிசில்-தலைவன்

# கூ

கூடிக் களிக்க விளையாட்டு
கூடி மேம்பட விளையாட்டு
கூர்த்த மதிக்கு விளையாட்டு
கூட்டுற வுக்கு விளையாட்டு
கூனை நிமிர்த்த விளையாட்டு
கூச்சலை மாற்ற விளையாட்டு
கூழைமை பெருக்க விளையாட்டு
கூடலர் தவிர்க்க விளையாட்டு
கூட்டரைப் பெருக்கும் விளையாட்டு
கூரியன் ஆக்கிடும் விளையாட்டு
கூர்த்தனம் ஆவது விளையாட்டு
கூடுதல் நலத்திற்கு விளையாட்டு
கூச்சம் போக்கும் விளையாட்டு
கூப்பிட்டு புகழ் தரும் விளையாட்டு

அரும்பொருள்

கூழைமை-கடமை
கூடலர்-பகைவர்
கூட்டர்-தோழர்
கூர்த்தனம்-பொழுதுபோக்கு
கூச்சம்-அச்சம்

# கெ

கெக்கலி கொட்டிட விளையாட்டு
கெக்களி மாற்றிட விளையாட்டு
கெடுமதி மாற்றும் விளையாட்டு
கெடாது வாழ்விக்கும் விளையாட்டு
கெம்பீரம் கொடுக்கும் விளையாட்டு
கெண்டையாய் ஆட்டிடும் விளையாட்டு
கெலிக்கச் செய்திடும் விளையாட்டு
கெழுதகை யாக்கிடும் விளையாட்டு
கெழுவினை வளர்ப்பது விளையாட்டு
கெழுமையைக் கொடுக்கும் விளையாட்டு
கெடுதலைத் தவிர்க்கும் விளையாட்டு
கெத்தினைக் கற்பிக்கும் விளையாட்டு
கெம்பல் உண்டாக்கும் விளையாட்டு
கெட்டிக் காரனுக்கு விளையாட்டு

அரும்பொருள்:

கெக்கலி-மகிழ்ச்சி
கெக்களி-தோல்வி
கெழுதகை-உரிமை
கெழுவு-நட்பு
கெழுமை-வளமை
கெத்து-உபாயம்
கெம்பல்-ஆரவாரம்

# கே

கேதம் மாற்றிடும் விளையாட்டு
கேசரி ஆக்கிடும் விளையாட்டு
கேட்கச் சுவைப்பது விளையாட்டு
கேட்டதைக் கொடுப்பது விளையாட்டு
கேடரைத் திருத்திடும் விளையாட்டு
கேளிரை நிறைப்பது விளையாட்டு
கேள்விஞானம் தரும் விளையாட்டு
கேளிக்கை மிகுந்தது விளையாட்டு
கேணம் கொடுப்பது விளையாட்டு
கேண்மை வளர்ப்பது விளையாட்டு
கேட்டொறும் சுவைநயம் விளையாட்டு
கேண்மையர் ஆக்கிடும் விளையாட்டு
கேடகம் வாழ்வுக்கு விளையாட்டு
கேடயம் ஆவதும் விளையாட்டு

அரும்பொருள்:

கேதம்-துன்பம்
கேசரி-அரிமா
கேளிர்-உறவினர்
கேண்மையர்-தன்மையர்
கேணம்-செழிப்பு
கேண்மை-நட்பு
கேடகம்-பாசறை

# கை

கைதினம் வளர்க்கும் விளையாட்டு
கைப்புனல் போன்றது விளையாட்டு
கைத்தலக் கனிபோல் விளையாட்டு
கைத்தவம் நீக்கிடும் விளையாட்டு
கைத்தல் இல்லாதது விளையாட்டு
கைநூல் போன்றது விளையாட்டு
கைதொடல் ஆவது விளையாட்டு
கைக்கோலாய் உதவும் விளையாட்டு
கையுதவி யாவது விளையாட்டு
கைகோணல் போன்றது விளையாட்டு
கைக்கெட்டு மின்பம் விளையாட்டு
கைவண்ணம் வளர்ப்பது விளையாட்டு
கைகாட்டி உதவும் விளையாட்டு
கைகோள் ஆவதும் விளையாட்டு

அரும்பொருள்:

கை-ஒழுக்கம்
கைத்தவம்-வஞ்சகம்
கைகோணல்-புலப்படல்
கைதொடல்-ஆகாரம்
கைகோள்-ஒழுக்கத்தன்மை

# கொ

கொள்கையை வளர்க்கும் விளையாட்டு
கொளுகொம்பு ஆவதும் விளையாட்டு
கொஞ்சும் மழலைபோல் விளையாட்டு
கொடைவள்ளல் போன்றது விளையாட்டு
கொண்டலாய் உதவும் விளையாட்டு
கொட்டிக் களிப்பதும் விளையாட்டு
கொண் மூ போன்றது விளையாட்டு
கொடிமரம் இளமைக்கு விளையாட்டு
கொடைமடம் பண்புக்கு விளையாட்டு
கொட்டாரம் திறமைக்கு விளையாட்டு
கொண்டியம் மாற்றிடும் விளையாட்டு
கொழுலாபம் இன்பமே விளையாட்டு
கொடுந்துயர் மாற்றிடும் விளையாட்டு
கொடைமனம் கொடுப்பதே விளையாட்டு

அரும்பொருள்:

கொண்மூ-ஆகாயம், மேகம்
கொடிமரம்-கொடிக்கம்பம்
கொட்டாரம்-முதல்வாசல்
கொண்டியம்-பகைமை, வருத்தம்

# கோ

கோடி நலம் தரும் விளையாட்டு
கோலங்கள் கொடுக்கும் விளையாட்டு
கோபத்தை அடக்கும் விளையாட்டு
கோவென உயர்த்தும் விளையாட்டு
கோளினை வளர்க்கும் விளையாட்டு
கோலா கலம்தரும் விளையாட்டு
கோழும்பம் தீர்க்கும் விளையாட்டு
கோடிகம் வாழ்வுக்கு விளையாட்டு
கோட்டம் நீக்கிடும் விளையாட்டு
கோணல்வழி மாற்றும் விளையாட்டு
கோதுகம் வளர்க்கும் விளையாட்டு
கோடகம் தினம் தினம் விளையாட்டு
கோட்பாடு வளர்த்திடும் விளையாட்டு
கோடையில் நிழல் மரம் விளையாட்டு

அரும்பொருள்:

கோலம்-அழகு
கோ தலைவன், அரசன்
கோள்-வலிமை
கோழும்பம்-குழப்பம்
கோடிகம்-ஆடை
கோட்டம்-பொறாமை
கோதுகம் - உள்ளக்களிப்பு
கோடகம்-புதுமை

# கௌ

கௌசல்யம் விளைக்கும் விளையாட்டு
கௌதூலம் வளர்க்கும் விளையாட்டு
கௌவை மாற்றும் விளையாட்டு
கௌசிகம் போன்றது விளையாட்டு
கௌடிலம் மாற்றும் விளையாட்டு
கௌரம் உடல்பெற விளையாட்டு
கௌதுகம் விளைப்பது விளையாட்டு
கௌதமன் திண்மைக்கு விளையாட்டு
கௌடில்யர் அறிவுக்கு விளையாட்டு
கௌரவம் கொடுப்பது விளையாட்டு

அரும்பொருள்

கௌசல்யம்-திறமை
கௌதூலம்-வாஞ்சை, பிரியம்
கௌவை-துன்பம்
கௌசிகம்-பட்டாடை
கௌடிலம்-வளைவு
கௌரம்-பொன்னிறம்
கௌதுகம்-ஜாலம்

# ச

சரித்திரம் படைப்பது விளையாட்டு
சங்கத் தமிழ்ச் சுவை விளையாட்டு
சட்டறம் கற்பிக்கும் விளையாட்டு
சடம்தினம் போக்கும் விளையாட்டு
சதிர்மனம் கொடுக்கும் விளையாட்டு
சந்தனப் பண்புக்கும் விளையாட்டு
சங்கீதம் ஆவதும் விளையாட்டு
சந்தைமனம் போக்கும் விளையாட்டு
சமத்காரம் வளர்க்கும் விளையாட்டு
சப்பரமஞ்சம் தான் விளையாட்டு
சமரசம் காப்பது விளையாட்டு
சகோதரத்துவம் வளர்ப்பது விளையாட்டு
சமுதாயம் காத்திட விளையாட்டு
சங்கமம் மனிதர்க்கு விளையாட்டு

அரும்பொருள்

சட்டறம்-தரும சாஸ்திரம்
சடம்-அஞ்ஞானம்
சதிர்-பெருமை
சப்பரமஞ்சம்-சிங்காரக்கட்டில்

# சா

சாகசம் வளர்ப்பது விளையாட்டு
சாட்டியம் குறைப்பது விளையாட்டு
சாதகம் அளிப்பது விளையாட்டு
சாதனை புரிந்திட விளையாட்டு
சாந்தம் வளர்த்திட விளையாட்டு
சாந்தியைப் பெற்றிட விளையாட்டு
சார்பே உயிருக்கு விளையாட்டு
சாரணன் மகிழ்ச்சிக்கு விளையாட்டு
சான்றோனாய் மாற்றிடும் விளையாட்டு
சான்றுநல் வாழ்வுக்கு விளையாட்டு
சாலை மேம்பாட்டுக்கு விளையாட்டு
சாதம்தான் வளமைக்கு விளையாட்டு
சாமியாய் காத்திடும் விளையாட்டு

அரும்பொருள்

சாகசம்-திறமை
சாட்டியம்-பொய்
சாதகம்-பயிற்சி
சார்பு-துணை
சாரணன்-தூதுவன்

# சி

சிந்தனைச் செழிப்புக்கு விளையாட்டு
சித்திரத் திருவுக்கு விளையாட்டு
சிந்தூரம் செயலுக்கு விளையாட்டு
சிகரம் உணர்வுக்கு விளையாட்டு
சிறுமையை மாற்றிடும் விளையாட்டு
சிக்கனச் சக்திக்கு விளையாட்டு
சித்தம திடம்பெற விளையாட்டு
சித்திகள் விளைத்திட விளையாட்டு
சிநேகம் கொண்டிட விளையாட்டு
சிற்ப மேனிக்கு விளையாட்டு
சிதையா நலம்பெற விளையாட்டு
சிங்கார நிலை பெற விளையாட்டு
சிறப்பான வாழ்வுக்கு விளையாட்டு
சிந்தாமணி தான் விளையாட்டு

அரும்பொருள்
சிந்தூரம்-திலகம்
சிந்தாமணி-விரும்பியதை தரும் தெய்வமணி

# சீ

சீக்கிரம் புகழ்பெற விளையாட்டு
சீத்துவம் உடல்பெற விளையாட்டு
சீயராய் மாற்றிட விளையாட்டு
சீர்மை பண்பிற்கு விளையாட்டு
சீர்தூக்கும் குணம்பெற விளையாட்டு
சீலம் வளர்த்திடும் விளையாட்டு
சீரான வாழ்வுக்கு விளையாட்டு
சீக்கை மாற்றிடும் விளையாட்டு
சீதம் மனதிற்கு விளையாட்டு
சீவனி வாழ்க்கைக்கு விளையாட்டு
சீவனைக் காத்திட விளையாட்டு
சீற்றம் காத்தற்கு விளையாட்டு
சீராட்டும் வாய்ப்புக்கு விளையாட்டு
சீவாதாரம் தான் விளையாட்டு!

அரும்பொருள்

சீத்துவம்-வனம்
சீக்கை-கோழை
சீதம்-குளிர்ச்சி
சீவனி-செவ்வழி

# சு

சுகஉடல் நிதம் பெற விளையாட்டு
சுத்தமாய் வாழ்ந்திட விளையாட்டு
சுரக்கும் அருள்சுனை விளையாட்டு
சுமையிலா மனம்பெற விளையாட்டு
சுருதமாய் விளங்கும் விளையாட்டு
சுவடியாய் பயன்தரும் விளையாட்டு
சுமடனை மாற்றிடும் விளையாட்டு
சுயநலம் போக்கும் விளையாட்டு
சுந்தர மேனிக்கு விளையாட்டு
சுற்றமாய் உதவும் விளையாட்டு
சுற்றிலும் பார்த்தாலும் விளையாட்டு
சுரபியாய் இருக்கும் விளையாட்டு
சுடர்போல் தினம் உதவ விளையாட்டு
சுவிசேடம் வாழ்வுக்கு விளையாட்டு

அரும்பொருள்
சுருதம்-வேதம்
சுவடி-புத்தகம்
சுமடன்-அறிவற்றவன்
சுரபி-அமுதசுரபி
சுடர்-சூரியன்
சுவிசேடம்-நற்செய்தி

# சூ

சூத்திரம் வாழ்வுக்கு விளையாட்டு
சூட்சமம் நலனுக்கு விளையாட்டு
சூதினை மாற்றும் விளையாட்டு
சூனியம் போக்கும் விளையாட்டு
சூரினைத் தீர்க்கும் விளையாட்டு
சூரியன் கடமைக்கு விளையாட்டு
சூல்பை பண்புக்கு விளையாட்டு
சூழ்நிலை உணர்த்தும் விளையாட்டு
சூட்டும் எழில் நலம் விளையாட்டு
சூடிடும் பெரும்புகழ் விளையாட்டு
சூழ்ச்சியை வளர்க்கும் விளையாட்டு
சூடாமணி ஒளி விளையாட்டு
சூசகம் வாழ்வு விளையாட்டு
சூத்திர தாரி தான் விளையாட்டு

அரும்பொருள்

சூனியம்-இன்மை
சூரினை-அச்சம்
சூழ்ச்சி-ஆலோசனை
சூசகம்-வலிமை

# செ

செழிப்புடன் திகழ்ந்திட விளையாட்டு
செயல்முறை நினைவுக்கு விளையாட்டு
செய்கையில் புதுமைக்கு விளையாட்டு
செந்நீர் திண்மைக்கு விளையாட்டு
செயலறிவு வளர விளையாட்டு
செல்வாக்குப் பெருக விளையாட்டு
செந்தமிழ் சுவைபோல் விளையாட்டு
செறிவுடை அறிவுக்கு விளையாட்டு
செழுமையின் முழுமைக்கு விளையாட்டு
செல்வம் சேர்த்திட விளையாட்டு
செல்வழி நல்வழி விளையாட்டு
செம்பொருள் போன்றது விளையாட்டு
செப்பமாய் உடல்பெற விளையாட்டு
செபம்போல் சுகம்தரும் விளையாட்டு

அரும்பொருள்

செந்நீர்-இரத்தம்

# சே

சேர்ந்தாரை அறிந்திட விளையாட்டு
சேட்டைகள் விரிந்திட விளையாட்டு
சேதங்கள் தவிர்த்திட விளையாட்டு
சேதிகள் சேர்த்திட விளையாட்டு
சேணமாம் முரடர்க்கு விளையாட்டு
சேடியே நலிந்தோர்க்கு விளையாட்டு
சேமமாய் வாழ்ந்திட விளையாட்டு
சேமிக்கும் பண்புக்கு விளையாட்டு
சேவகன் உதவிபோல் விளையாட்டு
சேவிக்க வைத்திடும் விளையாட்டு
சேவைநல் குணத்திற்கு விளையாட்டு
சேவல் நடைகொள்ள விளையாட்டு
சேர்வாரை உயர்த்தும் விளையாட்டு
சேடுதினம் தரும் விளையாட்டு

அரும்பொருள்

சேடு-அழகு, நன்மை, பெருமை

# சை

சைனிய பலம்தரும் விளையாட்டு
சைவகம் போன்றது விளையாட்டு
சைரிபம் உழைப்புக்கு விளையாட்டு
சைதனம் மகிழ்விக்கும் விளையாட்டு
சைதிதம் திமிருக்கு விளையாட்டு
சைசவம் மேன்மைக்கு விளையாட்டு
சைகதம் உணர்ச்சிக்கு விளையாட்டு
சையமாய் வாழ்விக்கும் விளையாட்டு
சையங்கள் காத்திடும் விளையாட்டு
சையோகம் காட்டும் விளையாட்டு

அரும்பொருள்

சைனியம்-படை, சேனை
சைலகம்-மலையிருவேலி
சைரிபம்-எருது
சைதனம்-ஆத்மா
சைதிதம்-பிரம்பு
சைசவம்-இளமை
சைகதம்-ஆற்றங்கரை
சையம்-மலை
சையம்-நியமம்
சையோகம்-சேர்க்கை

# சொ

சொல்லி மகிழ்ந்திட விளையாட்டு
சொர்க்கமாம் பூமியில் விளையாட்டு
சொக்கவே வைத்திடும் விளையாட்டு
சொத்தை மதிதீர விளையாட்டு
சொந்தம் வளர்த்திடும் விளையாட்டு
சொகுசு மேனிக்கு விளையாட்டு
சொல்வாரும் புகழ்பெறும் விளையாட்டு
சொல்வன்மை வளர்க்கும் விளையாட்டு
சொர்ணமாய் திகழ்ந்திட விளையாட்டு
சொரூபம் எழில்பெற விளையாட்டு
சொப்பன சுகத்திற்கும் விளையாட்டு
சொல்போல் செயலுக்கு விளையாட்டு
சொற்பமாய் கிடைப்பது விளையாட்டு
சொத்துதான் மனிதர்க்கு விளையாட்டு

அரும்பொருள்

சொரூபம்-உடல்

சொற்பம்-மலிவாக

# சோ

சோதியாய் நிலைப்பது விளையாட்டு
'சோ' எனக் காப்பது விளையாட்டு
சோகம் மாற்றிடும் விளையாட்டு
சோகையைப் போக்கிடும் விளையாட்டு
சோதனைக் களமே விளையாட்டு
சோர்வினை அகற்றும் விளையாட்டு
சோலைநிழல் போல் விளையாட்டு
சோறுபோல் காக்கும் விளையாட்டு
சோபிதம் அளிக்கும் விளையாட்டு
சோழகம் போல்சுகம் விளையாட்டு
சோதர பாசத்திற்கு விளையாட்டு
சோம்பலை நீக்கிடும் விளையாட்டு
சோமசம் மனிதர்க்கு விளையாட்டு
சோரியின் செழுமைக்கே விளையாட்டு

அரும்பொருள்

சோ-அரண், சோபிதம்-அழகு
சோழகம்-தென் காற்று, சோமசம்-பால்
சோரி-இரத்தம்

# சௌ

சௌமாரம் காப்பது விளையாட்டு
சௌமியம் கொடுப்பது விளையாட்டு
சௌமியம் வளர்ப்பது விளையாட்டு
சௌகரியம் அளிப்பது விளையாட்டு
சௌக்கியம் ஆவது விளையாட்டு
சௌடிரியம் தருவது விளையாட்டு
சௌந்தர்ய மேனிக்கு விளையாட்டு
சௌக்கிதார் நமக்கெலாம் விளையாட்டு
சௌமிய தாதுவுக்கு விளையாட்டு
சௌகந்தி போல்வது விளையாட்டு

அரும்பொருள்

சௌமாரம்-இளமை, சௌமியம்-அழகு
சௌரியம்-பலம், சௌகரியம்-சுகம்
சௌடிரியம்-வீரம், சௌந்தர்யம்-அழகு
சௌக்கிதார்-பாராக்காரன்
சௌமியதாது-கோழை
சௌகந்தி-மாணிக்க வகை

# த

தகுதியை வளர்த்திட விளையாட்டு
தகைமையை பெருக்கிட விளையாட்டு
தக்கார் மதித்திட விளையாட்டு
தளரா உடல்பெற விளையாட்டு
தசைகள் வலிமைக்கு விளையாட்டு
தடையிலா குருதிக்கு விளையாட்டு
தண்டுவடம் செழுமைக்கு விளையாட்டு
தத்துவம் வாழ்வுக்கு விளையாட்டு
தந்திரம் வளர்த்திட விளையாட்டு
தந்தைபோல் மதிதர விளையாட்டு
தமராய் உதவிட விளையாட்டு
தயார்நிலை தந்திட விளையாட்டு
தர்மம் காத்திடும் விளையாட்டு
தலையாய ராக்கிடும் விளையாட்டு

அரும்பொருள்

தமர்-உறவினர்

# தா

தாழ்மை போக்கிட விளையாட்டு
தாதியாய் உதவிடும் விளையாட்டு
தாய்மைக் குணம்பெற விளையாட்டு
தாய்போல் காத்திடும் விளையாட்டு
தாரணி அறிந்திட விளையாட்டு
தாராளப் பண்புக்கு விளையாட்டு
தால வண்மைக்கு விளையாட்டு
தாளாண்மை வளர்ச்சிக்கு விளையாட்டு
தானக் குணத்திற்கு விளையாட்டு
தான்தோன்றித் தனம்போக்க விளையாட்டு
தாழ்க்கோல் உணர்வுக்கு விளையாட்டு
தாழ்ந்தாரை மேலேற்றும் விளையாட்டு
தாமத செயல்ஓட்ட விளையாட்டு
தாளினைப் பெருக்கும் விளையாட்டு

அரும்பொருள்

தாலம்-நா; தாள்-முயற்சி

# தி

திருப்திக்கு ஒருசெயல் விளையாட்டு
திகில்மிகு செயலுக்கு விளையாட்டு
திகைப்பிலும் மகிழ்விக்கும் விளையாட்டு
தினந்தினம் புதுமைக்கும் விளையாட்டு
திறனாய்வு வாழ்க்கைக்கு விளையாட்டு
திடமான நம்பிக்கை விளையாட்டு
திறமைக்கு அனுபவம் விளையாட்டு
திட்பத்தின் சகலயம் விளையாட்டு
திண்ணராய திகழ்ந்திட விளையாட்டு
தித்திக்கும் நினைவுக்கு விளையாட்டு
திமிரினைத் தணித்திடும் விளையாட்டு
தியாகத்தை வளர்த்திடும் விளையாட்டு
தியானத்தில் ஆழ்த்தும் விளையாட்டு
திருநாள் தானே விளையாட்டு

அரும்பொருள்

திண்ணர்-வலிமையானவர்

# தீ

தீக்குணம் தகர்த்திட விளையாட்டு
தீங்குகள் தவிர்த்திட விளையாட்டு
தீபத்தின் தூய்மைக்கு விளையாட்டு
தீரம் வளர்த்திட விளையாட்டு
தீர்க்கத் தரிசனம் விளையாட்டு
தீவனம் உணர்ச்சிக்கு விளையாட்டு
தீவிர முன்னேற்றம் விளையாட்டு
தீர்த்தப் புனிதம்போல் விளையாட்டு
தீயோரைத் தெரிந்திட விளையாட்டு
தீர்வுகள் கண்டிட விளையாட்டு
தீஞ்சொல் செழுமைக்கு விளையாட்டு
தீர்ப்புக்கோர் மன்றம் விளையாட்டு
தீட்டிடும் இளமையை விளையாட்டு
தீசகன் ஆக்கும் விளையாட்டு

அரும்பொருள்

தீஞ்சொல்-இனியசொல்

தீசகன்-ஆலோசனையுள்ளவன்

# து

துக்கத்தை துரத்தும் விளையாட்டு
துணிகர செயலுக்கு விளையாட்டு
துணைவனாய் உதவும் விளையாட்டு
துரிதமாய் உயர்த்தும் விளையாட்டு
துளும்பிடும் ஜீவன் விளையாட்டு
துறைமுகம் நடைக்கு விளையாட்டு
துள்ளும் நடைக்கு விளையாட்டு
துல்லியம் திறமைக்கு விளையாட்டு
துவக்கம் சிறப்புக்கு விளையாட்டு
துற்கதம் போக்கிடும் விளையாட்டு
துலாக்கோல் நீதிக்கு விளையாட்டு
துதிப்பாடல் இதத்துக்கு விளையாட்டு
துரையென வாழ்ந்திட விளையாட்டு
துதிப்போம் சுகம்தரும் விளையாட்டு

அரும்பொருள்

துல்லியம்-மேன்மை
துற்கதம்-வறுமை

# தூ

தூண்போல் உடல்தரும் விளையாட்டு
தூங்காத செயலுக்கு விளையாட்டு
தூண்டுகோல் முயற்சிக்கு விளையாட்டு
தூளாக்கும் சிறுமையை விளையாட்டு
தூண்டும்நல் தலைவனாய் விளையாட்டு
தூய்மையின் தூதனாய் விளையாட்டு
தூயநல் நடத்தைக்கு விளையாட்டு
தூக்கத்தைக் கொடுத்திட விளையாட்டு
தூங்கலை ஒழித்திடும் விளையாட்டு
தூவும்நல் பண்புக்கு விளையாட்டு
தூரியம் உணர்வுக்கு விளையாட்டு
தூரிகை மகிழ்வுக்கு விளையாட்டு
தூயவோர் பீடம்தான் விளையாட்டு
தூவும்நல் பயன்மழை விளையாட்டு

அரும்பொருள்

தூங்கல்-சோம்பல்
தூரியம்-இசைக்கருவி

# தெ

தெம்புக்கு விளைநிலம் விளையாட்டு
தெய்வத்தின் மறுமுகம் விளையாட்டு
தெய்வீக நினைவுக்கு விளையாட்டு
தெவிட்டாத சுவைகளே விளையாட்டு
தெவ்வரை உறவாக்க விளையாட்டு
தெளிவான கண்ணோட்டம் விளையாட்டு
தென்றலின் சுகத்திற்கு விளையாட்டு
தெம்மாங்குப் பாட்டிற்கு விளையாட்டு
தென்படும் உழைப்புக்கு விளையாட்டு
தெரியலாய் ஒளிர்ந்திட விளையாட்டு
தெரிந்ததில் மகிழ்விக்கும் விளையாட்டு
தெரியாத புதிர்போக்கும் விளையாட்டு
தெருக்கூத்து மகிழ்ச்சிக்கும் விளையாட்டு
தெப்பம்போல் உதவிடும் விளையாட்டு

அரும்பொருள்

தெவ்வர்-பகைவர்
தெரியல்-பூமாலை

# தே

தேகத்தின் செவிலியாய் விளையாட்டு
தேசங்கள் இணைப்புக்கு விளையாட்டு
தேசிய உணர்வுக்கு விளையாட்டு
தேடும்நல் அமைதிக்கு விளையாட்டு
தேர்ச்சியின் எழுச்சிக்கு விளையாட்டு
தேவையின் முதிர்ச்சிக்கு விளையாட்டு
தேறாத மாந்தர்க்கும் விளையாட்டு
தேடிவந்து உதவிடும் விளையாட்டு
தேன்போல் பயன்தரும் விளையாட்டு
தேனீக்கள் செயலுக்கு விளையாட்டு
தேசிகம் உடலுக்கு விளையாட்டு
தேயுவாய் காத்திடும் விளையாட்டு
தேம்பொருள் போன்றது விளையாட்டு
தேரோட்டத் திருவிழா விளையாட்டு

அரும்பொருள்

செவிலி-தாதி
தேயு-காற்று
தேம்-தித்திப்பு
தேசிகம்-அழகு

# தை

தைவீகத் தன்மைக்கு விளையாட்டு
தைரியம் அளிப்பது விளையாட்டு
தைசதம் தருவது விளையாட்டு
தைதேயம் அழிப்பது விளையாட்டு
தைவரல் தசைக்கெலாம் விளையாட்டு
தைலைமரம் வாழ்வுக்கு விளையாட்டு
தைவதீபம் போன்றது விளையாட்டு
தைத்திரம் செயல்பெற விளையாட்டு
தைப்பூசத் தூய்மைபோல் விளையாட்டு
தைனியம் தருவது விளையாட்டு
தைலத்தின் சுகத்திற்கு விளையாட்டு
தையலின் பரிவுக்கு விளையாட்டு
தைமாத நம்பிக்கை விளையாட்டு

அரும்பொருள்
தைவீகம்-தெய்வீகத்தன்மை
தைசதம்-பலம்
தைதேயம்-அரக்கத்தன்மை
தைவரல்-தடவுதல்
தைலைமரம்-கட்டுமரம்
தைவதீபம்-கண்
தைத்திரம்-மீன்கொத்தி(சுறுசுறுப்பு)
தைனியம்-எளிமை

# தொ

தொகுத்தநல் திறமைக்கு விளையாட்டு
தொடக்கமே கடமைக்கு விளையாட்டு
தொடராத கீழ்மைக்கு விளையாட்டு
தொடர்ந்திடும் பொறுமைக்கு விளையாட்டு
தொடுவானக் கற்பனை விளையாட்டு
தொலைநோக்கு அறிவுக்கு விளையாட்டு
தொண்டரின் சிந்தைக்கு விளையாட்டு
தொழிலாளி உழைப்புக்கு விளையாட்டு
தொழில்நலம் துலங்கிட விளையாட்டு
தொட்டிலில் உறக்கம்போல் விளையாட்டு
தொந்தியைக் குறைத்திட விளையாட்டு
தொய்ந்தாரைத் தேற்றிட விளையாட்டு
தொன்னூலில் நன்னூல்போல் விளையாட்டு
தொன்றுதொட்டு வருவதே விளையாட்டு

# தோ

தோரணை தந்திடும் விளையாட்டு
தோல்வியை வென்றிட விளையாட்டு
தோற்றத்தின் செழுமைக்கு விளையாட்டு
தோழமை கொடுத்திட விளையாட்டு
தோற்றுவாய் வளத்திற்கு விளையாட்டு
தோணியாம் சுகத்திற்கு விளையாட்டு
தோட்டப் புதுமைக்கு விளையாட்டு
தோல்மேனிச் செழிப்புக்கு விளையாட்டு
தோலாட்டம் அழிக்கும் விளையாட்டு
தோல்தனம் போக்கும் விளையாட்டு
தோரண நினைவுக்கு விளையாட்டு
தோள்வளம் சேர்க்கும் விளையாட்டு
தோன்றாத் துணையாம் விளையாட்டு
தோன்றலாய் உயர்த்தும் விளையாட்டு

அரும்பொருள்

**தோலாட்டம்-அற்பத் தனம்**
**தோல்தனம்-புத்தியீனம்**
**தோன்றல்-தலைவன்**

# ஔ

தௌவுதல் தடுக்கும் விளையாட்டு
தௌதசிலம் ஆக்கும் விளையாட்டு
தௌரித நடைக்கு விளையாட்டு
தௌசார குளுமைக்கு விளையாட்டு
தௌதிலம் மதிப்புக்கு விளையாட்டு
தௌலேயம் புலன்பெற விளையாட்டு
தௌலிகள் ஆக்கிடும் விளையாட்டு

அரும்பொருள்

தௌவுதல்-கெடுதல்
தௌதசீலம்-பளிங்கு
தௌரிதம்-குதிரை நடை
தௌசாரம்-பனி
தௌதிலம்-முத்து
தௌலேயம்-ஆமை
தௌலிகன்-சித்திரக்காரன்

# ந

நற்பணி மன்றமே விளையாட்டு
நடுநிலை மேடையே விளையாட்டு
நல்லோர் பேரவை விளையாட்டு
நடுவரின் நெஞ்சுக்கு விளையாட்டு
நவநவத் திறமைக்கு விளையாட்டு
நங்கூரம் ஆசைக்கு விளையாட்டு
நற்கனித் தோட்டமே விளையாட்டு
நண்பர்கள் சந்திப்பு விளையாட்டு
நவரச நாடகம் விளையாட்டு
நடத்தையைத் திருத்திடும் விளையாட்டு
நடையதன் அழகுக்கு விளையாட்டு
நடிப்புக்கும் மூலம்தான் விளையாட்டு
நரம்புகள் உரத்திற்கு விளையாட்டு
நலங்களின் தாயகம் விளையாட்டு

# நா

நாகாக்கும் மேடைதான் விளையாட்டு
நாகரிக ஆசான் விளையாட்டு
நாக்குறுதி பெருக்க விளையாட்டு
நாட்டுக்கு உழைக்கவே விளையாட்டு
நாடிகள் செழிக்கவே விளையாட்டு
நாட்டத்தின் ஊட்டமே விளையாட்டு
நாணயம் பயின்றிட விளையாட்டு
நாயகன் நிலைபெற விளையாட்டு
நான்மறை போன்றது விளையாட்டு
நாற்பொருள் நல்கிடும் விளையாட்டு
நாதங்கள் ஊற்றுதான் விளையாட்டு
நானிலம் ஏற்றது விளையாட்டு
நாற்றங்கால் இளைஞர்க்கு விளையாட்டு
நாளெலாம் சுகம்தரும் விளையாட்டு

அரும்பொருள்

நாக்குறுதி-சொல்வன்மை
நான்மறை-நான்கு வேதம்
நாற்பொருள்-அறம்,பொருள்,இன்பம்,வீடு

# நி

நிகரின்றி விளங்கிடும் விளையாட்டு
நிகழ்காலம் சுவைத்திட விளையாட்டு
நியமங்கள் காத்திட விளையாட்டு
நித்திரை சுகம்பெற விளையாட்டு
நிமிர்ந்தநல் மார்புக்கு விளையாட்டு
நிதானம் காத்திட விளையாட்டு
நிதிவளம் பெருக்கிட விளையாட்டு
நினைவாற்றல் தருவது விளையாட்டு
நிபுணராய் மாறிட விளையாட்டு
நியாயங்கள் புரிந்திட விளையாட்டு
நியாயத்தின் கோயில்தான் விளையாட்டு
நிர்வாகம் கற்றிட விளையாட்டு
நிரந்தரம் ஆனது விளையாட்டு
நிலையான புகழுக்கு விளையாட்டு

# நீ

நீடித்த இளமைக்கு விளையாட்டு
நீதிகள் காத்திட விளையாட்டு
நீதிமான் பெயர்பெற விளையாட்டு
நீரூற்றுச் சக்திக்கு விளையாட்டு
நீராழி போன்றது விளையாட்டு
நீக்கிடும் சபலத்தை விளையாட்டு
நீட்டிடும் இன்பத்தை விளையாட்டு
நீசத்தனம் மாற்றும் விளையாட்டு
நீணிதி வழங்கும் விளையாட்டு
நீரவன் ஆகிட விளையாட்டு
நீச்சல் கலைதான் விளையாட்டு
நீங்கா திறம்தரும் விளையாட்டு
நீணெறி செல்லவே விளையாட்டு
நீடூழி வாழ்ந்திட விளையாட்டு

அரும்பொருள்

நீராழி-கடல்
நீணித-பெருஞ்செல்வம்
நீரவன்-அறிவுடையவன்
நீணெறி-நீண்டவழி

# நு

நுகர்ச்சித் திறமைக்கு விளையாட்டு
நுண்திறன் பெருமைக்கு விளையாட்டு
நுசுப்பு சிறுத்திட விளையாட்டு
நுதலின் ஒளிமைக்கு விளையாட்டு
நுட்பமாய் மதிபெற விளையாட்டு
நுணுக்கம் கற்றிட விளையாட்டு
நுரையீரல் செழிப்புக்கு விளையாட்டு
நுண்மான் நுழைபுலம் விளையாட்டு
நுழைவாசல் புகழுக்கு விளையாட்டு
நுளையனைப் புரிந்திட விளையாட்டு
நுவன்றிடும் நெறிகற்க விளையாட்டு
நுண்ணுணர்வு பெறவே விளையாட்டு
நுண்பொருள் கொண்டதே விளையாட்டு
நுவல்வோன் நயம்போல் விளையாட்டு

அரும்பொருள்

நுசுப்பு-இடை
நுதல்-நெற்றி
நுழைவழி-வாசல்
நுளையன்-இழிந்தவன்
நுவல்வோன்-ஆசிரியன்

# நூ

நூக்கம் பெருக்கிடும் விளையாட்டு
நூக்கும் உணர்வுக்கு விளையாட்டு
நூங்கும் புகழ்தரும் விளையாட்டு
நூங்கராய் உயர்த்திடும் விளையாட்டு
நூற்றல் வளர்த்திடும் விளையாட்டு
நூதனம் தினம்தினம் விளையாட்டு
நூல்நயம் நிறைந்தது விளையாட்டு
நூலோர் துணைதரும் விளையாட்டு
நூற்பயன் ஆவது விளையாட்டு
நூற்பழக்கம் வளர்க்கும் விளையாட்டு
நூற்றுவர் குணம்மாற்றும் விளையாட்டு
நூனாயம் மாற்றும் விளையாட்டு
நூநுட்ப அறிவுக்கு விளையாட்டு
நூறாண்டு வாழ்ந்திட விளையாட்டு

அரும்பொருள்:

நூக்கம்-உயரம்
நூக்கும்-தூண்டும்
நூங்கும்-மிகுதிபடுத்தும்
நூங்கர்-தேவர்
நூற்றல்-ஆற்றல்
நூதனம்-புதுமை
நூற்பழக்கம்-கல்வியற்பு
நூற்றுவர்-துரியோதனாதியர் (குளம்)
நூநுட்பம்-நுண்மை

# நெ

நெஞ்சின் மகிழ்வுக்கு விளையாட்டு
நெஞ்சுரம் நிறைந்திட விளையாட்டு
நெருக்கமாய் உறவுக்கு விளையாட்டு
நெறிகளைக் கற்றிட விளையாட்டு
நெறிமாறா குணம்பெற விளையாட்டு
நெறிகதை சுவைகட்கு விளையாட்டு
நெடுமிசை புகழுக்கு விளையாட்டு
நெட்டங்கம் அழிக்கும் விளையாட்டு
நெருப்பென பணியாற்ற விளையாட்டு
நெகிழும் உளம்பெற விளையாட்டு
நெம்புகோல் முயற்சிக்கு விளையாட்டு
நெஞ்சார விரும்புவது விளையாட்டு
நெருக்கடி சமாளிக்க விளையாட்டு
நெடும்பயணத் துணைவனாம் விளையாட்டு

அரும்பொருள்

நெடுமிசை-உச்சி
நெட்டங்கம்-செருக்கு

# நே

நேசம் வளர்த்திட விளையாட்டு
நேத்திரக் கூர்மைக்கு விளையாட்டு
நேயம் மிகுந்திட விளையாட்டு
நேரடி அனுபவம் விளையாட்டு
நேர்த்தியாய் வாழ்ந்திட விளையாட்டு
நேர்மையின் நிழற்கொடை விளையாட்டு
நேரத்தின் சிறப்புணர்த்தும் விளையாட்டு
நேர்கொண்ட பார்வைக்கு விளையாட்டு
நேர்முகப் போட்டி போல் விளையாட்டு
நேட்டத்தின் ஊட்டம்போல் விளையாட்டு
நேமகம் காத்திட விளையாட்டு
நேமிபோல் விளங்குவது விளையாட்டு
நேரல் நிலவிட விளையாட்டு
நேரலர் மாற்றிடும் விளையாட்டு
நேனம் போக்கிடும் விளையாட்டு

அரும்பொருள்

நேட்டம்-சம்பாதித்த பொருள்
நேமகம்-நியமம்
நேமி-கடல்
நேரல்-உடன்பாடு
நேரலர்-பகைவர்
நேனம்-பைத்தியம்

# நை

நைகரம் குறைக்கும் விளையாட்டு
நைசலை நீக்கும் விளையாட்டு
நைசியம் போன்றது விளையாட்டு
நைச்சிகம் போக்கும் விளையாட்டு
நைடதம் போல்வது விளையாட்டு
நைட்டியம் நலம்காக்கும் விளையாட்டு
நைபுணன் மதிதரும் விளையாட்டு
நையாயிகர் ஆக்கிடும் விளையாட்டு
நைவனம் எனஉயர்த்தும் விளையாட்டு
நைவேத்யம் மனிதர்க்கு விளையாட்டு

அரும் பொருள்
நைகரம்-வருத்தம்
நைசல்-நோய்,வியாதி
நைசியம்-மருந்து
நைச்சிகம்-தாழ்வு
நைடதம்-ஒருவகைக் காப்பியம்
நைட்டியம்-உறுதிநிலை
நைபுணன்-நிபுணன்
நையாயிகர்- நியாய நூல் கற்றோர்
நைவனம்-வீரன்

# நொ

நொண்டித்தனம் பழிக்கும் விளையாட்டு
நொண்டிச் சாக்கில்லாதது விளையாட்டு
நொந்தலை மாற்றிடும் விளையாட்டு
நொய்தல் திறன்தரும் விளையாட்டு
நொதுமல் குணம்மாற்றும் விளையாட்டு
நொவ்வும் உடல்தேற விளையாட்டு
நொறிதல் செயலுக்கு விளையாட்டு
நொறலைப் பண்புக்கு விளையாட்டு
நொறுக்கிடும் கீழ்த்தன்மை விளையாட்டு
நொந்தோர்க்கும் உதவுவது விளையாட்டு
நொள்ளை மதிமாற்றம் விளையாட்டு
நொடிதோறும் நிறைவுதரும் விளையாட்டு

அரும்பொருள்

நொண்டித்தனம்-புரட்டு ஆட்டம்
நொந்தல்-பலவீனம்
நொய்தல்-நுண்மை
நொதுமல்-உதாசீனம் செய்தல்
நொவ்வும்-மெலியும்
நொறிதல்-விரைவு
நொறிலை-அடக்கம்
நொந்தோர்-நலிந்தோர்
நொள்ளை-குருட்டுத்தனம்

# நோ

நோகாத மகிழ்ச்சிபெற விளையாட்டு
நோக்காடு தீர்க்கின்ற விளையாட்டு
நோக்கத்தில் எழுச்சிக்கு விளையாட்டு
நோஞ்சல் உடல்தேற்றும் விளையாட்டு
நோட்டத்தில் திறன் ஊட்டும் விளையாட்டு
நோதனை நீக்கிடும் விளையாட்டு
நோப்பாளம் அடக்கிடும் விளையாட்டு
நோய்வரா உடல்தரும் விளையாட்டு
நோய்தீன் மருந்தாகும் விளையாட்டு
நோவாமை நசுக்கிடும் விளையாட்டு
நோன்றல் குணத்திற்கு விளையாட்டு
நோன்மை வளர்த்திட விளையாட்டு

அரும் பொருள்:

நோக்காடு-துன்பம்
நோட்டத்தில்-கண்ணோட்டம்
நோதனை-தரித்திரம்
நோப்பாளம்-கோபம்
நோவாமை-பொறாமை
நோன்றல்-பொறுத்தல்
நோன்மை-பெருந்தன்மை

# ப

பகட்டான நடைபெற விளையாட்டு
பண்புகள் கற்றிட விளையாட்டு
பகிர்ந்துண்ணப் பழக்கிடும் விளையாட்டு
பகுத்தறிவு பெற்றிட விளையாட்டு
பகைமையை சமாளிக்க விளையாட்டு
பகைவரை மன்னிக்க விளையாட்டு
பரபரப்பு ஊட்டிடும் விளையாட்டு
பக்குவ மனம் பெற விளையாட்டு
பக்தியை வளர்த்திடும் விளையாட்டு
பசித்துப் புசித்திட விளையாட்டு
படிப்பகம் மனதுக்கு விளையாட்டு
பசும்பால் குணம்போல் விளையாட்டு
படைநடை அளிக்கும் விளையாட்டு
பண்டிதன் ஆக்கிடும் விளையாட்டு

# பா

பாக்கியம் மனிதர்க்கு விளையாட்டு
பாடுபடும் முயற்சிக்கு விளையாட்டு
பாட்டாளி உழைப்புக்கு விளையாட்டு
பாண்டித்யம் வளர்ப்பது விளையாட்டு
பாதகம் தவிர்ப்பது விளையாட்டு
பாதுகாப்பு உணர்வுக்கு விளையாட்டு
பாதுகாவல் ஆவதும் விளையாட்டு
பாராட்டும் மதிதரும் விளையாட்டு
பார்வையில் சிறந்திட விளையாட்டு
பாமரன் சுகம்பெற விளையாட்டு
பாசறை போன்றது விளையாட்டு
பால்மடி போன்றது விளையாட்டு
பாடநூல் வாழ்க்கைக்கு விளையாட்டு

## பீ

பிதாவின் போதனைபோல் விளையாட்டு
பிணிகளைப் போக்கிடும் விளையாட்டு
பிணக்கம் தீர்த்திடும் விளையாட்டு
பிரபலம் ஆகிட விளையாட்டு
பிராணம் மிகுந்திட விளையாட்டு
பிறர்பிழை பொறுத்திட விளையாட்டு
பிரிவினை தவிர்த்திடும் விளையாட்டு
பின்னணி மேன்மைக்கு விளையாட்டு
பின்னிலை மாற்றிடும் விளையாட்டு
பின்பற்ற நல்வழி விளையாட்டு
பிற்கால உயர்வுக்கு விளையாட்டு
பிள்ளைகள் வாழ்வெலாம் விளையாட்டு
பிழையிலா திறமைக்கு விளையாட்டு
பிரகாச வாழ்வுக்கு விளையாட்டு
பிரார்த்தனை போன்றது விளையாட்டு

# பீ

பீடம்போல் உயர்ந்தது விளையாட்டு
பீடுற வாழ்ந்திட விளையாட்டு
பீடிகை உயர்வுக்கு விளையாட்டு
பீழைகள் மாற்றிட விளையாட்டு
பீரம் போன்றது விளையாட்டு
பீதகம் முயற்சிக்கு விளையாட்டு
பீலியின் மென்மைக்கு விளையாட்டு
பீருவைப் போக்கிடும் விளையாட்டு
பீதம் உடல்தரும் விளையாட்டு
பீமரம் போன்றது விளையாட்டு
பீலக உழைப்புக்கு விளையாட்டு
பீலுகப் பிடிக்கு விளையாட்டு
பீமன் வலிமைக்கு விளையாட்டு
பீடரம் ஆவதும் விளையாட்டு

அரும்பொருள்

பீழைகள்-துன்பங்கள்
பீரம்-தாய்ப்பால்
பீரு-அச்சம்
பீமரம்-யுத்தம்
பீலுகம்-கரடி
பீதகம்-பொன்னாடை
பீலி-மயில்தோகை
பீதம்-பொன்னிறம்
பீலகம்-எறும்பு
பீடரம்-தேவாலயம்

## பு

புண்ணிய வாழ்வுக்கு விளையாட்டு
புதுமைப் படைப்புக்கு விளையாட்டு
புனிதம் காத்திட விளையாட்டு
புன்கண் தீர்த்திட விளையாட்டு
புதியவர் உறவுக்கு விளையாட்டு
புதினமாம் உணர்வுக்கு விளையாட்டு
புத்தக அறிவுக்கு விளையாட்டு
புதுப்பித்து வளர்க்கும் விளையாட்டு
புலன்களின் வலிமைக்கு விளையாட்டு
புன்னகை மலர்ச்சிக்கு விளையாட்டு
புலமை விரிந்திட விளையாட்டு
புனைவினை உயர்த்திட விளையாட்டு
புகழுக்கு ஏணி விளையாட்டு
புகலிடம் உலகுக்கு விளையாட்டு

அரும்பொருள்

புன்கண்-நோய்
புனை-அழகு

# பூ

பூங்கா மனிதர்க்கு விளையாட்டு
பூசனைக் குரியது விளையாட்டு
பூசலைத் தவிர்ப்பது விளையாட்டு
பூரிப்பைக் கொடுப்பது விளையாட்டு
பூரண சக்திக்கு விளையாட்டு
பூவாய் மயக்கிட விளையாட்டு
பூதியம் கொடுக்கும் விளையாட்டு
பூடகை வளர்த்திடும் விளையாட்டு
பூழ்தி உறுதிக்கு விளையாட்டு
பூருவம் மாற்றிடும் விளையாட்டு
பூட்ச பெருகுக்கு விளையாட்டு
பூணாரம் வாழ்வுக்கு விளையாட்டு
பூநிற மேனிக்கு விளையாட்டு
பூபாளம் மகிழ்ச்சிக்கு விளையாட்டு

அரும் பொருள்

பூதியம்-செல்வம்
பூடகை-உறுதி
பூழ்தி-தசை
பூருவம்-முதுமை
பூட்சி-உடம்பு
பூணாரம்-ஆபரணம்
பூபாளம்-காலையில் பாடும் ஒரு வகைப் பாடல்

# பெ

பெரிது பெரிது விளையாட்டு
பெட்டகம் பண்புக்கு விளையாட்டு
பெயருக்கும் புகழுக்கும் விளையாட்டு
பெரியோர் உறவுக்கு விளையாட்டு
பெருமையை அளிப்பது விளையாட்டு
பெருமிதம் தருவது விளையாட்டு
பெருந்துயர் போக்கிடும் விளையாட்டு
பெற்றோரை மகிழ்விக்கும் விளையாட்டு
பெங்கினை மாற்றிடும் விளையாட்டு
பெருந்தினம் கொடுத்திடும் விளையாட்டு
பெருவழி நல்வழி விளையாட்டு
பெருமழை மகிழ்ச்சிக்கு விளையாட்டு
பெருநாள் வாழ்வுக்கு விளையாட்டு
பெருமாள் ஆக்கிடும் விளையாட்டு

அரும்பொருள்
பெங்கு-தீயொழுக்கம்
பெருவழி-வாழ்வின் வழி
பெருமாள்-பெருமையிற்சிறந்தோர்.

# பே

பேராண்மை வளர்க்க விளையாட்டு
பேராசை தவிர்க்க விளையாட்டு
பேரவை மதிக்க விளையாட்டு
பேதமை போக்க விளையாட்டு
பேதங்கள் தவிர்க்க விளையாட்டு
பேறுகள் பலபெற விளையாட்டு
பேரொளி அனுபவம் விளையாட்டு
பேரின்பம் தினம்பெற விளையாட்டு
பேரருள் வளர்க்கும் விளையாட்டு
பேதலிப்பு மாற்றும் விளையாட்டு
பேச்சுறுதி அளிக்கும் விளையாட்டு
பேரமைதி நல்கும் விளையாட்டு
பேய்வெறி போக்கும் விளையாட்டு
பேரார்வம் வழங்கும் விளையாட்டு

அரும்பொருள்

பேதலிப்பு-வேற்றுமை

# ஐ

பையுள் தீர்க்கும் விளையாட்டு
பைதல் மாற்றும் விளையாட்டு
பைசுணம் போக்கும் விளையாட்டு
பைதனம் அழிக்கும் விளையாட்டு
பைபீலம் செயல்தரும் விளையாட்டு
பைரவம் தீர்க்கும் விளையாட்டு
பைந்தார் புகழ்தரும் விளையாட்டு
பைம்பொன் மதிப்புக்கு விளையாட்டு

அரும் பொருள்

பையுள்-நோய்
பைதல்-துன்பம்
பைசுணம்-கஞ்சத்தனம்
பைதனம்-பித்தம்
பைபீலம்-எறும்பு
பைரவம்-அச்சம்
பைந்தார்-பசியமாலை
பைம்பொன்-பசும்பொன்

# பொ

பொங்கும் பெருந்திறன் விளையாட்டு
பொதுஅறிவு நிதம்பெற விளையாட்டு
பொதுநெறி ஓங்கிட விளையாட்டு
பொதுநோக்கு தழைக்க விளையாட்டு
பொதுவுடமை பெருக விளையாட்டு
பொய்மைகள் பொசுங்கிட விளையாட்டு
பொருள்கள் வாய்ப்புக்கு விளையாட்டு
பொருள்தமை சேர்க்க விளையாட்டு
பொருளியல் மேன்மைக்கு விளையாட்டு
பொலிவினில் உடல்மகிழ விளையாட்டு
பொல்லாங்கு போக்கிட விளையாட்டு
பொழுது போக்குக்கு விளையாட்டு
பொறுமையை வளர்த்திட விளையாட்டு
பொறாமை பொசுக்கிடும் விளையாட்டு

# போ

போக்கிடம் உணர்வுக்கு விளையாட்டு
போட்டியின் உணர்வுக்கு விளையாட்டு
போதனை சாதனை விளையாட்டு
போராட்ட கிளர்வுக்கு விளையாட்டு
போரிடும் திறமைக்கு விளையாட்டு
போற்றிடும் பெருமைக்கு விளையாட்டு
போக்கம் நிலைமைக்கு விளையாட்டு
போகம் தினம்பெற விளையாட்டு
போர்க்குணம் வளர்க்கும் விளையாட்டு
போலித்தனம் மாற்றும் விளையாட்டு
போக்கரைத் திருத்தும் விளையாட்டு
போகியர் வழிமாற்றும் விளையாட்டு
போதகர் அனைவர்க்கும் விளையாட்டு
போதுமென மனம் தரும் விளையாட்டு

# பௌ

பௌவம் போன்றது விளையாட்டு
பௌர்ணமி சுகத்திற்கு விளையாட்டு
பௌதீகம் செழுமைக்கு விளையாட்டு
பௌடிகம் வளமைக்கு விளையாட்டு
பௌத்த அறம்மிகும் விளையாட்டு
பௌருஷம் வளர்க்கும் விளையாட்டு
பௌலோமர் குணம்மாற்றும் விளையாட்டு

அரும்பொருள்:

பௌவம்-கடல்
பௌதீகம்-உலகம்
பௌடிகம்-நிகழ்காலம்
பௌருஷம்-புருஷத்தன்மை
பௌலோமர்-அரக்கர்

# ம

மகத்துவம் மிக்கது விளையாட்டு
மகாத்மா ஆக்கும் விளையாட்டு
மகுடம் அளிப்பது விளையாட்டு
மகிமை கொடுப்பது விளையாட்டு
மங்கள வாழ்வுக்கு விளையாட்டு
மகிழ்ச்சியில் ஆழ்த்திடும் விளையாட்டு
மடமை போக்கிடும் விளையாட்டு
மரபின் மகிமையே விளையாட்டு
மருந்தாய் பயன்தரும் விளையாட்டு
மழையாய் உதவும் விளையாட்டு
மலிவாய் கிடைப்பது விளையாட்டு
மறுமலர்ச்சி தருவது விளையாட்டு
மரணத்தை வென்றிடும் விளையாட்டு
மதிப்புக்கு மறுபெயர் விளையாட்டு

# மா

மாசிலா துணைதான் விளையாட்டு
மாசுகள் போக்கிடும் விளையாட்டு
மாட்சிமை வளர்க்கும் விளையாட்டு
மாண்பினைப் பொழியும் விளையாட்டு
மாத்திரை போன்றது விளையாட்டு
மாந்தருள் உயர்த்திடும் விளையாட்டு
மாப்பிள்ளை மதிப்புக்கு விளையாட்டு
மாருதி வலிமைக்கு விளையாட்டு
மார்பின் விரிவுக்கு விளையாட்டு
மாறாத இளமைக்கு விளையாட்டு
மான உணர்வுக்கு விளையாட்டு
மானின் விரைவுக்கு விளையாட்டு
மாமழை போன்றது விளையாட்டு
மானிட வாழ்வுதான் விளையாட்டு

அரும்பொருள்

மாருதி - அனுமார்

# மி

மிகமிக நல்லது விளையாட்டு
மிகுதியாய் பயன்தரும் விளையாட்டு
மிகையல்ல நற்றுணை விளையாட்டு
மிடியையும் போக்கிடும் விளையாட்டு
மிடுக்கான நடைதரும் விளையாட்டு
மித்திர சுகம்தரும் விளையாட்டு
மிரட்டாத ஆசான் விளையாட்டு
மிஞ்சிடும் திறமைக்கு விளையாட்டு
மிலேச்சர் குணம்மாற்றும் விளையாட்டு
மின்னலின் விரைவுக்கு விளையாட்டு
மின்சாரம்போல் உதவும் விளையாட்டு
மிதமான குணம் கொள்ள விளையாட்டு
மிட்டாய் இனிப்புக்கு விளையாட்டு
மிருகம்போல் உழைப்புக்கு விளையாட்டு

அரும்பொருள்

மிடி-வறுமை
மித்திரன்-நட்பு
மிலேச்சன்-காட்டான்

# மீ

மீளாத பற்றுக்கு விளையாட்டு
மீன் வலையாயிழுக்கும் விளையாட்டு
மீண்டும்எனத் தூண்டும் விளையாட்டு
மீட்டும் இன்னிசை விளையாட்டு
மீன்கொத்தி குறிதரும் விளையாட்டு
மீளவழி சொல்லும் விளையாட்டு
மீலிதம் வாழ்வுக்கு விளையாட்டு
மீறினால் தண்டிக்கும் விளையாட்டு
மீத்துவைக்கும் உணர்வுக்கு விளையாட்டு
மீகாரம் பண்புக்கு விளையாட்டு
மீசரம் அனைத்துக்கும் விளையாட்டு
மீறும் குணம்மாற்றும் விளையாட்டு
மீளியாய் உயர்த்தும் விளையாட்டு
மீட்பராய் காக்கும் விளையாட்டு

அரும்பொருள்

மீசாதம்-அலங்காரம்
மீகாரம்-மேலிடம்
மீசரம்-மேலானது
மீளி-தலைவன்
மீட்பர்-இரட்சகர்

# மு

முதனூல் ஆனது விளையாட்டு
முதுகெலும்பு வாழ்வுக்கு விளையாட்டு
முனைமுகம் போன்றது விளையாட்டு
முன்னேற்றம் தருவது விளையாட்டு
முப்பாலாய் வழிகாட்டும் விளையாட்டு
முக்காலும் உண்மையே விளையாட்டு
முனைப்புக்கும் உழைப்புக்கும்
விளையாட்டு
முடியாத பந்தமே விளையாட்டு
முழுமையுள் செழுமைதான் விளையாட்டு
முகக்களை கொடுப்பது விளையாட்டு
முக்கனி சுவைபோல விளையாட்டு
முதலிடம் முடிவிடம் விளையாட்டு
முக்கியம் வாழ்வுக்கு விளையாட்டு
முற்றிலும் சிறந்தது விளையாட்டு

அரும்பொருள்

முதனூல்-வேதம்
முனைமுகம்-போர்க்களம்
முப்பால்-குறள்

# மூ

மூடரை மாற்றும் விளையாட்டு
மூர்க்கரைத் திருத்தும் விளையாட்டு
மூதறிஞர் ஆக்கும் விளையாட்டு
மூதுரை போன்றது விளையாட்டு
மூத்தோர் துணைபோல் விளையாட்டு
மூச்சுக்குப் பயிற்சியே விளையாட்டு
மூலதனம் ஒருவர்க்கு விளையாட்டு
மூலவேர் வலிமைக்கு விளையாட்டு
மூலிகை சிறப்புக்கு விளையாட்டு
மூப்பினைத் தவிர்ப்பது விளையாட்டு
மூவாசை குறைக்கும் விளையாட்டு
மூளையை வளர்த்திடும் விளையாட்டு
மூப்பில்லாதது என்றும் விளையாட்டு
மூதாதையரின் பரிசு விளையாட்டு

## ஒ

மெய்யறிவு தரும் விளையாட்டு
மெய்யினை வளர்க்கும் விளையாட்டு
மெய்ஞானக் குரு விளையாட்டு
மெச்சும் குணம்தரும் விளையாட்டு
மெல்லிசை சுகத்துக்கு விளையாட்டு
மெலிவினைப் போக்கும் விளையாட்டு
மெருகினை ஊட்டும் விளையாட்டு
மெய்யுரை வளர்க்கும் விளையாட்டு
மெல்லியர் வளம்பெற விளையாட்டு
மெய்பொருள் உணர்த்தும் விளையாட்டு
மெய்மறதி நீக்கும் விளையாட்டு
மென்மை குணம்தரும் விளையாட்டு
மென்னடை நல்கும் விளையாட்டு
மென்மேலும் உயர்த்தும் விளையாட்டு

அரும்பொருள்

மெய்-உடல்
மெல்லியர்-பெண்
மெய்பொருள்-உண்மை
மெய்மறதி-கோபம்

# மே

மேதாரம் மனம்தரும் விளையாட்டு
மேதகம் தினம்தரும் விளையாட்டு
மேதகு நிலைதரும் விளையாட்டு
மேதம் போக்கிடும் விளையாட்டு
மேதிநடை மாற்றும் விளையாட்டு
மேதிரம் அனைவர்க்கும் விளையாட்டு
மேதிரன் ஆக்கிடும் விளையாட்டு
மேதினி உணர்ந்திட விளையாட்டு
மேதையாய் மாற்றும் விளையாட்டு
மேரை வளர்த்திடும் விளையாட்டு
மேழியாம் உடலுக்கு விளையாட்டு
மேன்மையே வாழ்வுக்கு விளையாட்டு
மேம்பாடு தரும் விளையாட்டு
மேன்மக்க ளாக்கிடும் விளையாட்டு

அரும்பொருள்

மேதாரம்-மலை
மேதகம்-மதிப்பு
மேதி-எருமை
மேதிரம்-சமம்
மேதிரன்-புத்திசாலி
மேதினி-உலகம்
மேரை-மரியாதை
மேழி-கலப்பை

# மை

மைமனம் போக்கும் விளையாட்டு
மைத்திரம் கொடுக்கும் விளையாட்டு
மைந்து உடல்தரும் விளையாட்டு
மையமாம் நலத்திற்கு விளையாட்டு
மைதானம் பண்புக்கு விளையாட்டு
மையலை மாற்றிடும் விளையாட்டு
மைதலைச் செய்திடும் விளையாட்டு
மைவிளக் காகும்நல் விளையாட்டு
மைனா செயல்பெற விளையாட்டு
மைமல் பொழுதுக்கு விளையாட்டு

அரும்பொருள்

மைமனம்-இருள்மனம்
மைத்திரம்-சிநேகிதம்
மைந்து-அழகு
மையல்-மயக்கும்
மைதல்-மசிதல்
மைவிளக்கு-நெய்விளக்கு
மைமல்-மாலைநேரம்

# மொ

மொய்களம் போன்றது விளையாட்டு
மொழிபல அறிந்திட விளையாட்டு
மொய்ம்பின் திண்மைக்கு விளையாட்டு
மொய்தாய் பண்புக்கு விளையாட்டு
மொய்ப்பணம் போன்றதே விளையாட்டு
மொழுக்கர்கள் இளைத்திட விளையாட்டு
மொக்கைமதி மாற்றும் விளையாட்டு
மொழியின்றி பழகிட விளையாட்டு
மொய்சுவை திரண்டது விளையாட்டு
மொத்தத்தில் சிறந்தது விளையாட்டு

அரும்பொருள்

மொய்க்களம்-போர்க்களம்
மொய்ம்பு-தோள்
மொய்தாய்-அன்னை
மொழுக்கர்-தடித்தவர்

# மோ

மோகத் திசைமாற்றும் விளையாட்டு
மோசகன் தெளிவுக்கு விளையாட்டு
மோதம் உழைப்பென விளையாட்டு
மோதல் தவிர்த்திட விளையாட்டு
மோதனம் வளர்ப்பது விளையாட்டு
மோழையை மாற்றுமே விளையாட்டு
மோடிபோல் சித்துக்கு விளையாட்டு
மோனம் வளர்ப்பது விளையாட்டு
மோசடி மனம்தரா விளையாட்டு
மோட்ச சுகத்திற்கு விளையாட்டு
மோலி அணிவிக்கும் விளையாட்டு

அரும்பொருள்

மோசகன்-துறவி
மோதம்-விரும்பியவற்றை அடையும் பிடிவாதம்
மோதனம்-உவகை
மோலி-கிரீடம்

# மௌ

மௌகுலி சுறுசுறுப்பு விளையாட்டு
மௌடியை மாற்றுமே விளையாட்டு
மௌட்டியம் போக்கிடும் விளையாட்டு
மௌலியை கருப்பாக்கும் விளையாட்டு
மௌனத்தின் சுகம் காட்டும் விளையாட்டு
மௌனியர் நிலைஏற்றும் விளையாட்டு
மௌலன் எனக்காட்டும் விளையாட்டு

அரும்பொருள்

மௌகுலி-சாதம்
மௌடி-பரிகாசம்
மௌட்டியம்-அறியாமை
மௌலி-தலைமுடி
மௌனியர்-முனிவர்
மௌலன்-நல்லஅம்சத்தான்

# ய

யவ்வனம் நிலைத்திட விளையாட்டு
யட்டிநம் வாழ்க்கைக்கு விளையாட்டு
யவனர் கற்பனைக்கு விளையாட்டு
யமமாம் பயிற்சிக்கு விளையாட்டு
யந்திர உழைப்புக்கு விளையாட்டு
யதேச்சை குணம்மாற விளையாட்டு
யதார்த்தம் முறைபெற விளையாட்டு

அரும்பொருள்

யட்டி- ஊன்றுகோல்
யவ்வனம்-இளமை
யவனர்-சித்திரக்காரர்
யமம்-அடக்கம்
யதேச்சை-இஷ்டம்
யதார்த்தம்-சரிமுறை

# யா

யாக்கை பலம்பெற விளையாட்டு
யாக்குதல் பொறிகளை விளையாட்டு
யாண்டும் நிறைந்தது விளையாட்டு
யாங்கனும் நிலைப்பது விளையாட்டு
யாதனை மாற்றிடும் விளையாட்டு
யாமத்தின் உறங்கிட விளையாட்டு
யாப்புபோல் கவிதைக்கு விளையாட்டு
யானைபோல் நினைவுக்கு விளையாட்டு
யாழ்இசை கவர்ச்சிக்கு விளையாட்டு
யாமளம் பெருக்கிட விளையாட்டு
யாமுகம் வளர்ச்சிக்கு விளையாட்டு
யாம்எனும் செருக்ககற்றும் விளையாட்டு
யாவரும் விரும்பிடும் விளையாட்டு
யாத்திரை வாய்ப்புக்கு விளையாட்டு

அரும்பொருள்

யாக்கை-உடல்
யாக்குதல்-கட்டுதல்
யாண்டும்-எங்கும்
யாதனை-துன்பம்
யாமம்-இரவு
யாமளம்-இளமை

# வ

வசந்தம் வாழ்வுக்கு விளையாட்டு
வகுத்தல் கொள்கைக்கு விளையாட்டு
வகைவகை உணர்வுக்கு விளையாட்டு
வக்கிரம் அழிவுக்கு விளையாட்டு
வசதியை உணர்த்திட விளையாட்டு
வசீகரம் தரும் விளையாட்டு
வறுமையை விரட்டும் விளையாட்டு
வசைகளை மாற்றிடும் விளையாட்டு
வஞ்சகம் சாடிடும் விளையாட்டு
வடிவம் உடல்பெற விளையாட்டு
வழக்கத்தின் செம்மைக்கு விளையாட்டு
வரலாற்றுப் புகழுக்கு விளையாட்டு
வண்டுபோல் செயல்பட விளையாட்டு
வணங்கிட வைத்திடும் விளையாட்டு

# வா

வாகனம் மேன்மைக்கு விளையாட்டு
வாகினை வழங்கிடும் விளையாட்டு
வாக்கியம் தெளிவுக்கு விளையாட்டு
வாய்சுவை நிறைவுக்கு விளையாட்டு
வாத்தியார் வலிமைக்கு விளையாட்டு
வாய்ப்புக்கள் பெருக்கிடும் விளையாட்டு
வாரியாய் அனுபவம் விளையாட்டு
வாழ்க்கைக்கு வாழ்க்கையே விளையாட்டு
வாலறிவு ஊட்டும் விளையாட்டு
வாலிபம் நிதம்தரும் விளையாட்டு
வாழ்நாளை மிகுத்திடும் விளையாட்டு
வானரம் மதிமாற்றும் விளையாட்டு
வாயுவை வசமாக்கும் விளையாட்டு
வாய்மைக்கு இடம்சேர்க்கும் விளையாட்டு

அரும்பொருள்

வாகு-ஒழுங்கு
வாரி-கடல்
வாலறிவு-பேரறிவு
வானரம்-குரங்கு

# வி

விசால மனதுக்கு விளையாட்டு
விசாரம் விரட்டிடும் விளையாட்டு
விசித்திர அனுபவம் விளையாட்டு
விசுவாச குணத்திற்கு விளையாட்டு
விஞ்ஞான நுணுக்கங்கள் விளையாட்டு
விடாப்பிடி பண்புக்கு விளையாட்டு
விடுகதைத் திறமைக்கு விளையாட்டு
விடுதியாம் உறவுக்கு விளையாட்டு
வினாவும் விடைகளும் விளையாட்டு
விதிகளைப் பின்பற்ற விளையாட்டு
விருப்பத்தின் மாட்சிக்கு விளையாட்டு
வியக்கும்நல் காட்சிக்கு விளையாட்டு
விபத்தென்றால் தப்பிக்க விளையாட்டு
விளையாடும் சுகம்கொள்ள விளையாட்டு

அரும்பொருள்

விசாரம்-கவலை

# வீ

வீரரின் பாசறை விளையாட்டு
வீட்டிலே தீபம்போல் விளையாட்டு
வீரத்தை விளைவிக்கும் விளையாட்டு
வீண்பேச்சைக் குறைத்திடும் விளையாட்டு
வீம்பினைத் தணிவிக்கும் விளையாட்டு
வீரநல் காவியம் விளையாட்டு
வீநெஞ்சம் தினம்தரும் விளையாட்டு
வீழினும் காப்புதரும் விளையாட்டு
வீழாகத் துணைவரும் விளையாட்டு
வீறினை வழங்கும் விளையாட்டு
வீதமும் நூறுபயன் விளையாட்டு
வீரையை விரட்டிடும் விளையாட்டு
வீச்சுக்கு விளைநிலம் விளையாட்டு
வீரராய் வாழ்ந்திட விளையாட்டு

அரும்பொருள்

வீம்பு-தற்பெருமை
வீ-மலர்
வீழ்-விழுது
வீறு-வெற்றி
வீதம்-சதவிகிதம்
வீரை-துன்பம்

# வெ

வெறிக்குணம் மாற்றும் விளையாட்டு
வெறுப்பையும் குறைக்கும் விளையாட்டு
வெறுமையை அழிக்கும் விளையாட்டு
வெற்பென மனம்தரும் விளையாட்டு
வெற்றியை வழங்கும் விளையாட்டு
வெகுமதி வாழ்வுக்கு விளையாட்டு
வெட்கத்தை விரட்டும் விளையாட்டு
வெட்டிச்செயல் மாற்றும் விளையாட்டு
வெஞ்சுடர் கடமைக்கு விளையாட்டு
வெட்டவெளி காற்றுசுகம் விளையாட்டு
வெளிப்படும் திறம் காண விளையாட்டு
வெறுக்கையை மிகுத்திடும் விளையாட்டு
வெளிச்சமே வாழ்வுக்கு விளையாட்டு
வெற்றிக்கும் வெற்றிதான் விளையாட்டு

அரும்பொருள்

வெற்பு-மலை
வெறுக்கை-செல்வம்

# வே

வேகம் கொடுப்பது விளையாட்டு
வேடிக்கை மகிழ்ச்சிக்கு விளையாட்டு
வேட்டையின் ரசிப்புக்கும் விளையாட்டு
வேண்டும் நலம்தரும் விளையாட்டு
வேதங்கள் கருத்துக்கு விளையாட்டு
வேதனை மாற்றிடும் விளையாட்டு
வேதாகமம் ஆகும் விளையாட்டு
வேதாந்தி ஆகவும் விளையாட்டு
வேர்வையின் வெளிப்பாடு விளையாட்டு
வேந்தனாய் சிறப்பிக்கும் விளையாட்டு
வேய்ங்குழல் இனிமைக்கு விளையாட்டு
வேல்மதிக் கூர்மைக்கு விளையாட்டு
வேற்றுமை வீழ்த்திடும் விளையாட்டு
வேறென்ன தாய்வீடு விளையாட்டு

# ஐ

வைகறைத் தென்றல்போல் விளையாட்டு
வைதீக விதிகள்போல் விளையாட்டு
வைப்புநிதி யாய்காக்கும் விளையாட்டு
வையகம் வணங்கிடும் விளையாட்டு
வைரம் மதிப்புக்கு விளையாட்டு
வைராக்கியம் கொடுக்கும் விளையாட்டு
வைரியை நட்பாக்கும் விளையாட்டு
வைகைபோல் புகழ்சேர்க்கும் விளையாட்டு
வைத்தியம் நோய்க்கெலாம் விளையாட்டு
வைதல் பண்பகற்றும் விளையாட்டு
வைபவம் வாழ்வுக்கு விளையாட்டு
வைபோகம் வழங்குமே விளையாட்டு

அரும்பொருள்

வைரி-பகைவன்
வைபவம்-விசேடநாள்
வைபோகம்-சந்தோஷம்



1937-2001

# ஆசிரியரைப்பற்றி

டாக்டர்.எஸ். நவராஜ் செல்லையா அவர்கள் தனது மாணவர் பருவத்தில் சிறந்த விளையாட்டு வீரராகத் திகழ்ந்தவர். சென்னை பல்கலைக்கழக அளவில் மும்முறைத்தாண்டும் போட்டியில் சாதனையாளர். மழலையர் பள்ளி குழந்தைகள் முதல் ஆய்வறிஞர் பட்டம் பெற்ற மாணவர் வரை பாடம் நடத்திடும் வாய்ப்பு பெற்றவர்.

சென்னை பல்கலைக்கழக வரலாற்றில் விளையாட்டுத்துறையில் ஆய்வறிஞர் பட்டம் பெற்ற முதல் மாணவர்.

விளையாட்டுத்துறையில் அதிகமான நூல்களை எழுதி, தமிழ் இலக்கிய. வளர்ச்சிக்கு துணை நின்றவர். எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்பதில் அதிக ஈடுபாடு கொண்டவர்.

விளையாட்டுத்துறையை சார்ந்த 'விளையாட்டுக் களஞ்சியம்' மாத இதழை 25 ஆண்டுகள் தொடர்ந்து ஆசிரியர் பொறுப்பை ஏற்று வெளியிட்ட பெருமைக்குரிய மனிதர்.

விளையாட்டுக்களின் மேன்மையை சொல்லும் ஒலி நாடாக்களையும், 'ஓட்டப்பந்தயம்' என்னும் திரைப்படத்தையும் தயாரித்து, இயக்கி, நடித்து திரையிட்ட சாதனையாளர்.

மூன்று முறை தேசிய விருது பெற்றுள்ளார். ஒருமுறை தமிழ்நாடு அரசின் விருதையும் பெற்றுள்ளார்.

'திருக்குறள் புதிய உரை' என்னும் நூலில் திருக்குறள் (அறத்துப்பால் மட்டும்) ஒழுக்கம் பற்றி கூறும் உடலியல் நூல் என்னும் கருத்தை முதன்மையாகக் கொண்டு புத்துரைதந்து தமிழுக்கு தொண்டாற்றிய தமிழ்த்தொண்டர்.

ஆர். ஆடம் சாக்ரட்டீஸ்
பதிப்பாளர்.